**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 06/பேரூ/2024**

**நாள்: 25.02.2025**

திருமதி ப. மகாலட்சுமி
எலத்தூர்
ஈரோடு மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்
எலத்தூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம் – எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், எலத்தூர், தெற்குபதி, 76, மில் ரோடு (ஐயர் தோட்டம்) என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. ப. மகாலட்சுமி என்பவரின் 09.01.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2024 அன்று பெறப்பட்டு 06/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், எலத்தூர், தெற்குபதி, 76, மில் ரோடு (ஐயர் தோட்டம்) என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. ப. மகாலட்சுமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"எலத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட ராஜா நகருக்கு பூங்கா மற்றும் தண்ணீர் டேங்க் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட Reserve சைட் இடத்தில், கோவில் கட்டியும் மற்றும் வீடுகளை கட்டுவதற்கும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனை எலத்தூர் பேரூராட்சியில் புகாராக மனு அளித்தும் பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர் திரு. வெங்கடேஷ் என்பவர் நாங்கள் புகாராக அளிப்பதை ஆக்கிரமிப்பாளர்களிடம் தெரிவித்து, எங்களுக்கு மனஉளைச்சலை ஏற்படுத்துகிறார். இப்பணியாளர் இப்பகுதி பொதுமக்கள் பூங்காவிற்கு

பதிலாக சாலை அமைத்திட வேண்டும் என கோரியுள்ளனர் என உண்மைக்கு புறம்பான தகவல்களை அளிக்கிறார். இதற்கிடையில் ராஜா நகரில் பூங்கா அமைக்கப்பட வேண்டிய இடத்தில் பேரூராட்சியால் தார்சாலை அமைத்தும் மற்றும் கழிவு நீர் கால்வாயையும் ஏற்படுத்தியுள்ளனர். எங்களது ராஜா நகரில் பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகள் உள்ளதால் அவர்கள் விளையாட்டு திறனை வளர்ப்பதற்கு பூங்கா முக்கிய அம்சமாக திகழ்கிறது. மேலும் இப்பகுதி வாழ் வயதானவர்களுக்கு பொழுது போக்கிற்கு உகந்த இடமாக பூங்கா இருப்பதால், பூங்கா அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பை அகற்றி, அவ்விடத்தில் பூங்கா அமைய ஆவன செய்யுமாறு வேண்டி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்."

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.07.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"திருமதி ப. மகாலட்சுமி என்பவரின் மனுவில் ராஜா நகர் பகுதியில் பூங்கா ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், பூங்கா அமைத்து தருமாறும் வரப்பெற்ற புகார் மனு பரிசீலனை செய்ததில், வார்டு எண்.14 மில் ரோடு தெற்கு பதி, ராஜா நகரில் அனுமதியற்ற மனைப்பிரிவில் க.ச. எண்.819/2, 819/3 இல் 2175 சதுர அடியில் (5 செண்ட்) எலத்தூர் பேரூராட்சிக்கு ரிசர்வ் சைட் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்.9436/2023/ஆ4 நாள் 23.06.2023ன் ஆணைப்படி ராஜா நகர் மெயின் வீதி 1,2,3 மற்றும் குறுக்கு வீதி 1,2 ஆகிய பகுதிகளில் 5 எண்ணிக்கையில் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி சாலைகள் அனைத்தும் இணைப்பு சாலைகளாக உள்ளதால் பொதுமக்கள் கோரிக்கையின்படி ரிசர்வ் சைட்டில் தார்சாலை போடப்பட்டுள்ளது. மேலும் பூங்காவிற்குள் தகரத்தினால் அமைக்கப்பட்ட கோவிலும் உள்ளது. இக்கோவில் சுமார் 25 வருடங்களாக வழிபட்டு வருவதால் இக்கோவிலை அப்புறப்படுத்தக்கூடாது என கடிதம் வாயிலாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும் பூங்கா அமைப்பதற்கு சுமார் 20 செண்ட் இடம் தேவைப்படுகிறது. ஆனால் ரிசர்வ் சைட்டானது 5 செண்டில் தான் இடம் உள்ளது. ஏற்கனவே இந்த இடத்தில் கோவிலும் உள்ளது. ஆகையால் மேற்படி ரிசர்வ் சைட்டில் பூங்கா அமைக்க போதிய இடவசதியின்மையால் பூங்கா அமைக்க வழிவகை இல்லை என்பதையும், ஏற்கனவே சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் வார்டு எண்.14 கவுண்டர் வீதியில் 2022–2023 அம்ருத் 20 திட்டத்தில் ரூ.40.80 இலட்சம் மதிப்பீட்டில் 12590 சதுர அடியில் (27.60 செண்ட்) பூங்கா அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும் மற்றும் எதிர்மனுதாரரான எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரையும் 21.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி ப. மகாலட்சுமி என்பவர் 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- ஈரோடு மாவட்டம், எலத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 50 குடும்பங்கள் வசிக்கும் ராஜா நகரில் பூங்கா அமைப்பதற்கும் மற்றும் தண்ணீர் தொட்டி (Water Tank) வைப்பதற்கும் ஒதுக்கப்பட்ட சுமார் 7 செண்ட் பரப்பளவு கொண்ட Reserved Site இடத்தினை கோவில் அமைத்தும், மற்றும் வீடு கட்டுவதற்கும் சிலர் அவ்விடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

- இதுகுறித்து எலத்தூர் பேரூராட்சியில் புகார் தெரிவிக்கையில், பூங்கா இடத்தில் பூங்காவிற்கு பதிலாக சாலை அமைக்க வேண்டும் என பொது மக்கள் தெரிவித்ததாக செயல் அலுவலர் தெரிவித்தார்.

- ஆனால் ராஜாநகரில் உள்ள பொதுமக்கள் அனைவரும் பூங்கா இடத்தில் பூங்கா மட்டுமே பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

- அவ்விடத்தில் தேவையில்லாமல் சாலையினை முறைகேடாக அமைத்துள்ளனர்.

- இதுகுறித்து உதவி அலுவலர் திரு. வெங்கடேஷ் மற்றும் வார்டு உறுப்பினரிடம் முறையீட்டும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

- சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பொழுது போக்குவதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்கும் பூங்கா அமைக்க அவசியம் என்பதால், இவ்விடத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பூங்கா அமைக்க ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆர். கிருத்திகா என்பவர் 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- சென்னை, நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களது கடிதம் ந.க. எண். 13193/2017/எல்ஏ1, நாள் 27.03.2018–இன்படி ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், எலத்தூர் பேரூராட்சி பழைய வார்டு எண். 13 / புது வார்டு எண் 14 எலத்தூர் 'அ' கிராமம் தெற்குபதி ரீ.ச. எண்.819 இல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு (ராஜா நகர்) sold plot frame work தயாரிக்கப்பட்டது.

- மேற்காணும் மனைப்பிரிவில் 5 செண்ட் பரப்பளவு கொண்ட நிலம் Reserved Site-க்காக புல எண்கள். 819/2, 819/3 தானமளிக்கப்பட்டது என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- மேற்காணும் தானப்பத்திரத்தில் பொதுமக்கள் நலனுக்காக சாலைகள், பூங்கா, மின்கம்பம், சாக்கடைகள் ஆகியவற்றை அமைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேற்காணும் மனைப்பிரிவில் 5 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2023–24–இன்கீழ் சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் ஆகியவை 1182 சதுர அடியிலும் அமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்களால் கோவில் 121 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது. மீதமாக 872 சதுர அடி மட்டுமே காலியிடமாக உள்ளது. அவ்விடத்தில் பூங்கா அமைக்க வழிவகையில்லை.

- அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அவ்விடத்தில் பூங்கா அமைக்க வேண்டாம் என தெரிவித்துள்ளனர்.

- மேற்காணும் இடத்தில், பூங்கா அமைப்பதற்கு மன்ற தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் எலத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட ராஜா நகரில் பூங்கா அமைக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

ஈரோடு மாவட்டம், எலத்தூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி ப. மகாலட்சுமி என்பவர் தனது 09.01.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வருமாறு புகார்களை தெரிவித்துள்ளார்:-

எலத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட ராஜா நகரில் பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட Reserve Site–ல் பேரூராட்சியால் பூங்கா அமைக்கப்படவில்லை. ஆனால் அவ்விடத்தில் சிலர் ஆக்கிரமிப்பு செய்து கோவில் கட்டியுள்ளனர். மேலும் சிலர் வீடுகளை கட்டுவதற்காக இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர், தவிர எலத்தூர் பேரூராட்சியால் பூங்கா இடத்தில் தார்சாலை மற்றும் கழிவு நீர் வடிகால் அமைத்துள்ளனர். எனவே, ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை அகற்றி அவ்விடத்தில் பூங்கா அமைக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், நம்பியூர் கிராமம், மஜரா கொன்னமடைப்பாளையத்தில் வசிக்கும் திரு. K.P. ரத்தினசாமி என்பவர் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் Reserve Site இடத்தினை (2175 சதுர அடி) 11.08.2008 நாளிட்ட தானப் பத்திரத்தில் எலத்தூர் பேரூராட்சிக்கு தானமாக அளித்து, இவ்விடத்தில் பொதுமக்களின் நலனுக்காக ரோடுகள், பூங்கா, மின்சார விளக்குகள், தெருவிளக்குகள் அமைக்கவும், சாக்கடை வசதிகள், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தவும் வசதியாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு தான ஆவணத்தை பேரூராட்சிக்கு எழுதி கொடுத்துள்ளார்.

மேற்காணும் தானமாக அளிக்கப்பட்ட 5 செண்ட் பரப்பளவு கொண்ட இடமானது புல எண்.819/2, 819/3 என வகைப்படுத்தப்பட்டுள்ளதை செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ஆணை ந.க. எண்.9436/2023/ஆ4 நாள் 23.06.2023–ன்படி, 2023–24 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எலத்தூர் பேரூராட்சி வார்டு எண்.14, ராஜா மெயின் வீதி, 1, 2, 3 மற்றும் ராஜா நகர் குறுக்கு வீதி 1, 2 சாலைகளை தார்சாலைகள் அமைக்கவும் மற்றும் வடிகால் அமைக்கவும் எலத்தூர் பேரூராட்சி நகர் மன்றத்தில் தீர்மானம் (தீர்மானம் எண்.67/2023) நாள் 11.08.2023 அன்று நிறைவேற்றப்பட்டு, ராஜா நகரில் தார் சாலைகள் மற்றும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளன என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

ராஜா நகரில் Reserve Site இடமானது 5 சென்ட் பரப்பளவு மட்டுமே கொண்ட இடத்தில், பூங்கா அமைக்க வேண்டுமெனில் சுமார் 20 சென்ட் இடம் தேவைப்படுகிறது. எனவே, போதிய இடவசதியின்மையால் பூங்கா அமைக்க வழிவகை இல்லை என்பதையும், செயல் அலுவலரின் அறிக்கை மூலமும் அறிய வருகிறது. இருப்பினும், ராஜா நகர், Reserve Site இடத்திலிருந்து சுமார் 1 கி. மீ. தொலைவில் எலத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 கவுண்டர் வீதியில் 12,590 சதுடி அடி (27.60 சென்ட்) பரப்பளவில் பூங்கா அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது என்பதையும், செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் புகராக தெரிவிக்கும் ராஜா நகருக்குட்பட்ட ரிசர்வ் சைட்டில் தகரத்தினால் அமைக்கப்பட்ட கோவில் உள்ளது எனவும், இக்கோவிலை சுமார் 25 வருடங்களாக வழிபட்டு வருவதால் அப்புறப்படுத்த வேண்டாம் என பொதுமக்கள் கோரிக்கை சமர்ப்பித்துள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது. இந்நிலையில், பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தானப்பத்திரத்தில் கோவில் அமைப்பது தொடர்பாக ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்பதால், Reserve site இடத்தில் ஆக்கிரமிப்பு நடைபெற்று உள்ளது என தெரிய வருகிறது. எனவே, எலத்தூர் சிறப்புநிலை பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து முடிவு எடுத்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எலத்தூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி ப. மகாலட்சுமி, க/பெ பச்சியண்ணன்,
76, மில் ரோடு, (ஐயர் தோட்டம்),
தெற்குபதி, எலத்தூர், நம்பியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம் –638 458.
2) செயல் அலுவலர், எலத்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).